# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2097/2 - 2018 නොවැම්බර් මස 12 වැනි සඳුදා - 2018.11.12

*2097/2 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### *மாகாண சபை அறிவித்தல்கள்*

**மத்திய மாகாண மாகாண சபை**

*2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கம் கொண்ட மத்திய மாகாண மாகாண*
*சபையின் கலாச்சார அலுவல்கள் திணைக்கள சட்டவாக்கம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண மாகாண சபையினால் 2017.08.02 ஆந் திகதி அங்கீகரித்து 2018.10.06 ஆந் திகதி கௌரவ ஆளுநரால் அனுமதித்துள்ள மேற்குறித்த சட்டவாக்கம் அனைவரும் தெரிந்து கொள்வதற்காக இதில் வெளியிடுகின்றேன்.

**சரத் ஏக்கநாயக்க,**
மத்திய மாகாண சபையின் முதல் அமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், நீதித்துறை மற்றும்
சமாதானம், உள்ளூராட்சி, மனித வள, கல்வி மற்றும் கலாசார அலுவல்கள், சுற்றுலா,
காணி, கூட்டுறவு அபிவிருத்தி, வியாபாரம் மற்றும் வணிக, உணவு வழங்கல்கள்
மற்றும் விநியோக அலுவல்கள் மற்றும் முதலீட்டு ஒருங்கிணைப்பு மற்றும்
ஏனைய அமைச்சுகளின் கீழ் கொள்ளப்படா விடயங்கள் தொடர்பான அமைச்சர்.

முதல் அமைச்சரின் அலுவலகம்,
மத்திய மாகாணத்தின் மாகாண சபை,
கண்டி,
2018, ஒற்றோபர் 08.

*மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க*
*கலாச்சார அலுவல்கள் திணைக்கள சட்டவாக்கம்*

முதல் அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல், நீதித்துறை மற்றும் சமாதானம், உள்ளூராட்சி மனித வள
கல்வி மற்றும் கலாசார அலுவல்கள், சுற்றுலா, காணி, கூட்டுறவு அபிவிருத்தி, வியாபாரம் மற்றும் வணிக
உணவு வழங்கல்கள் மற்றும் விநியோக அலுவல்கள் மற்றும் முதலீட்டு
ஒருங்கிணைப்பு மற்றும் ஏனைய அமைச்சுகளின் கீழ் கொள்ளப்படா விடயங்கள் தொடர்பான அமைச்சு.



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# மத்திய மாகாண மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க கலாசார அலுவல்கள் தொடர்பான திணைக்களம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கான சட்ட வரைபு

*மத்திய மாகாண மாகாண சபைக்காக கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும், கண்காட்சி மற்றும் பகிரங்க அரங்கேற்றத்திற்கான திரைப்படங்களுக்கு அனுமதி வழங்கல் தவிர்ந்த நாடக அரங்குகள் மற்றும் நாடகங்கள், மாகாண இலக்கிய நடவடிக்கைகள், இசை மற்றும் உல்லாச அலுவல்கள் உள்ளிட்ட கலை அம்சங்களை ஒழுங்கமைத்தல், புராதன மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நினைவுச் சின்னங்கள் மற்றும் அறிக்கைகள் பற்றிய ஆராய்ச்சிகளையும் விசாரணைகளையும் நடாத்துதல் அவற்றைப் பாதுகாத்தல் மற்றும் பேணுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் மத்திய மாகாண சபையினால் நிர்வகிக்கப்படுகின்றதும் நிதி வழங்கப்படுகின்றதுமான நூ தனசாலைகள் மற்றும் ஏனைய அது போன்ற நிறுவனங்களை நடாத்திச் செல்லல், ஒழுங்குபடுத்தல் மற்றும் தேவையான ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தல் ஆகிய பணிகளுக்காகவும் அது சம்பந்தமானதும் அதற்கு ஏற்புடையதுமான காரணங்களின் நிமித்தம் ஒழுங்கு விதிகளை ஏற்படுத்துவதற்குமான ஒரு சட்ட வரைபாகும்.*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாண மாகாண சபையால் பின்வருமாறு சட்டமாக்கப்படுகிறது**

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

இச்சட்ட வரைபானது மத்திய மாகாண மாகாண சபையின் 2016 ஆம் ஆண்டிற்கான 03 ஆம் இலக்க கலாசார அலுவல்கள் சட்ட வரைபு என அழைக்கப்படுவதோடு மத்திய மாகாண ஆளுநரின் அனுமதி கிடைத்த தினம் முதல் நடைமுறைக்கு வரும்.

## பகுதி I

### மத்திய மாகாண மாகாண சபையின் கலாசார அலுவல்கள் திணைக்களத்தை ஸ்தாபித்தல்

*மத்திய மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தை ஸ்தாபித்தல்.*

1. இச்சட்ட வரைபின் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதற்காக (இதன் பின்னர் திணைக்களம் என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற) மத்திய மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒன்றை ஸ்தாபித்தல் வேண்டும்.
திணைக்களத்திற்கு மாகாணப் பணிப்பாளர் ஒருவரை நியமித்துக் கொள்ளல் வேண்டும்.

*கலாசார அலுவல்கள் பணிப்பாளரை நியமித்தல்.*

2. (1) திணைக்களத்தின் பணிகள் மற்றும் அதிகாரங்களை செயற்படுத்த கலாசார அலுவல்கள் பணிப்பாளரை நியமித்தல்.
(2) மாகாணப் பணிப்பாளர் ஆளுநரால் நியமிக்கப்படுவதோடு அவர் திணைக்களத்தின் தலைவராக இருத்தல் வேண்டும்.

*திணைக்களத்தின் பணியாட் தொகுதி*

3. திணைக்களத்தின் பணிகள் மற்றும் அதிகாரங்களை நிறைவேற்றுவதற்கு மாகாண கலாசாரப் பணிப்பாளருக்கு ஒத்தாசை வழங்குவதற்குத் தேவையான ஏனைய அதிகாரிகளையும் மற்றும் ஆளணியினரையும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் விதி முறைகளுக்கு ஏற்ப நியமித்துக் கொள்ளல் வேண்டும்.

*திணைக்களத்தின் ஏனைய அதிகாரிகளை நியமித்தல்.*

4. மாகாணப் பணிப்பாளரின் அதிகாரங்களையும் பணிகளையும் மேலே 3 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்படுகின்ற அதிகாரிகளுக்கு வழங்க முடியும்.

*அதிகாரங்களை வழங்குதல்*

*திணைக்களத்தின் குறிக்கோள்கள்.*

5. பின்வரும் குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவது இத்திணைக்களத்தின் கடமையாகும்.

(1) கண்காட்சி மற்றும் பகிரங்க அரங்கேற்றத்துக்காக திரைப்படங்களுக்கு அனுமதி வழங்கல் தவிர்ந்த மாகாணத்தினுள்ளான நாடக அரங்குகள் மற்றும் அரங்கேற்றங்கள், திரைப்பட மாளிகை நிகழ்ச்சிகள் மற்றும் உல்லாச அலுவல்கள் தொடர்பில் சீராக்கல்களை மேற்கொள்ளலும் ஒழுங்குபடுத்தலும்.

(2) தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட சட்டமொன்றின் மூலம் அல்லது சட்டமொன்றின் கீழ் பிரகடனம் செய்யப்பட்டவை தவிர்ந்த புராதன மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாயந்த நினைவுச் சின்னங்கள் மற்றும் அறிக்கைகளைப் பாதுகாத்தலும் பேணி வருதலும்.

(3) மாகாண சபையால் நிருவகிக்கப்படுகின்ற நூதனசாலைகள் மற்றும் அதனை ஒத்த நிறுவனங்களை நடாத்திச் செல்லலும் பாதுகாத்தலும்.

(4) மாகாணத்தினுள் இலக்கிய, சமய மற்றும் ஏனைய நிறுவன மயப்படுத்தப்படாத சங்கங்கள், அமைப்புகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்தல் மற்றும் கலாலயங்கள் தொடர்பான நடவடிக்கைகள்.

(5) மாகாணத்தினுள் கலை மற்றும் இலக்கியத் துறைகளிலான படைப்பாற்றல்களை மேம்படுத்தல் மற்றும் கலைஞர்களது நலனோம்பல்.

(6) மத்திய மாகாணத்தின் புலப்படு, புலப்படா கலாசார முதுசங்களை பாதுகாப்பதற்கான கலாசார மற்றும் கலை விவகாரங்கள், கலைஞர்கள் மற்றும் அது தொடர்பான துறைகள் பற்றிய ஆராய்ச்சிகளையும் தேடல்களையும் மேற்கொள்ளல், அது தொடர்பான அறிவை பகிரங்கப்படுத்தலும் பாதுகாத்தலும்.

(7) மத்திய மாகாணத்தினுள் சமய, கலாசார, இலக்கிய, கலை பண்பாட்டு மற்றும் ஆன்மீக நற்பண்புகளை மேம்படுத்தல்.

*திணைக்களத்தின் பணிகள் மற்றும் அதிகாரங்கள்.*

6. திணைக்களத்தின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் கீழ்வருமாறு அமைத்தல் வேண்டும்.

(1) மாகாணத்தினுள் கலாசாரக் குழுக்களை ஸ்தாபித்தலும் அவற்றுக்கு கலைஞர்களை இணைத்துக் கொள்ளலும், அவர்களுக்கு உரிய கொடுப்பனவுகளைச் செலுத்தலும் கலைஞர்களை கலை நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்தலும்.

(2) கலாசாரக் கமிட்டிகளை அமைத்தல், பதிவு செய்தல், முகாமைத்துவம் செய்தல், மேற்பார்வை செய்தல், கணக்காய்வு செய்தல் மற்றும் அவற்றைக் கலைத்து விடல்.

(3) கலாலயங்களை பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்.

(4) மாகாண சபையால் நிதி வழங்கப்படுகின்ற நூதனசாலைகள் மற்றும் அது போன்ற ஏனைய நிறுவனங்களை ஸ்தாபித்தல், நடாத்திச் செல்லல் மற்றும் நிர்வகித்தல்.

(5) மத்திய மாகாணத்தினுள் காணப்படும் நாடக அரங்குகள் மற்றும் திரை அரங்குகளது சுகாதாரம் பேணல், அவை பொது மக்களுக்கு பொருத்தமானவையா? என ஆராய்ந்து அது தொடர்பான விடயங்கள் குறித்த நியமங்களைத் தீர்மானித்தல், பரிசோதனை செய்தல்.

(6) மாகாணத்தினுள் கலாசார நிகழ்ச்சிகளைத் திட்டமிடல், நடைமுறைப்படுத்துதல் மதிப்பீடு செய்தல் மற்றும் உதவிகளை வழங்குதல்.

(7) கலாசாரக் கமிட்டிகள் மற்றும் கலாலயங்களை ஸ்தாபித்தலும் அவற்றை மேம்படுத்தலும். அவற்றை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலும்.

(8) இத்திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றத் தேவைப்படுவதாக கருதப்படும் உதவிகளை அரசு, மாகாண சபைகள், உள்ளூராட்சி அலுவலகங்கள் அல்லது வேறு சட்ட ரீதியான நபர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலும், அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பை பேணிக் கொள்ளலும்.

(9) கலைஞர்களது சேம நலன் பேணும் வகையிலான நிகழ்ச்சிகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்துதல், தொடர்ந்து நடாத்திச் செல்லல் மற்றும் அவற்றிக்கு வசதிகளைச் செய்து கொடுத்தல்.

(10) மாகாணத்தினுள் கலாசார கிராமங்களை அமைத்தல் மற்றும் பாரம்பரிய அறிவை எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாத்து வழங்குவதற்குத் தேவையான நிகழ்ச்சிகளை திட்டமிடல்.

(11) கலாலயங்கள், பிராந்திய கலாசாரக் கமிட்டிகள், மாகாண கலாசார, அதிகார பீடம் ஆகியன முன்வைக்கும் நிதி மற்றும் கணக்கு அறிக்கைகளை கணக்காய்வுக்கு உட்படுத்துதல் மற்றும் நிதி மோசடிகள் தொடர்பில் உரிய சட்ட நடவடிக்கை எடுத்தல்.

(12) (அ) மாகாணத்தின் பாதுகாக்கப்பட வேண்டிய கலாசார உரிமைகளாக அடையாளம் காணப்பட்ட பூசைப் பொருட்கள், ஆடை அணிகலன்கள், கலை அறிவு சம்பந்தப்பட்ட பொருட்கள் ஆகியவற்றை "மாகாணத்தின் பாதுகாக்கப்பட வேண்டிய கலாசார உரிமைகள் எனப் பெயரிடல்".

(ஆ) "மாகாணத்தின் பாதுகாக்கப்பட வேண்டிய கலாசார உரிமைகள்" எனப் பெயரிடப்பட்ட பூசைப் பொருட்கள், ஆடை அணிகலன்கள், கலை அறிவு சம்பந்தப்பட்ட பொருட்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகம் தொடர்பிலும் அதனோடிணைந்த விடயங்கள் தொடர்பிலும் தராதரங்களைத் தீர்மானிக்கத் துணை புரிதல்.

(13) (1) திணைக்களத்தின் பணிகளுக்காக நாடக அரங்குகள், திரைப்பட மாளிகைகள், உல்லாச நிகழ்ச்சிகளை நடாத்தும் இடங்கள், கலைப் படைப்புக்களை விற்பனை செய்யும், காட்சிப்படுத்தும் மற்றும் விநியோகிக்கும் இடங்கள் ஆகியனவற்றுக்கு :

(அ) உள் நுழைதல் ;
(ஆ) சோதனையிடல் ;
(இ) ஏதும் உத்தரவுச் சீட்டொன்றை அனுமதிப் பத்திரமொன்றை, அறிக்கையொன்றை, சான்றிதழ் ஒன்றை அல்லது வேறேதும் ஆவணமொன்றை சமர்ப்பிக்குமாறு கோரல் ;
(ஈ) அத்தகைய உத்தரவுச் சீட்டினை அனுமதிப்பத்திரத்தை, அறிக்கையை, சான்றிதழை அல்லது வேறு ஆவணத்தை சோதனையிடல் ;
(உ) தேவையான ஆவணங்கள் மற்றும் தகவல்களை நிழற் பிரதியெடுத்தல் அல்லது பிரித்தெடுப்புச் செய்தல் ;
(ஊ) நிலையப் பொறுப்பதிகாரிகளிடம் அல்லது வேறு தேவைப்படும் நபர்களிடம் கேட்டறிதல் அல்லது விசாரித்தல்.

(14) இத் திணைக்களத்தின் பணிகளை மேற்கொள்ளத் தேவை எனக் கருதும் அரச, மாகாண சபை, உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் திணைக்களப் பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றிக் கொள்ளல், உள்நாட்டு, வெளிநாட்டு மற்றும் ஏனைய சட்ட ரீதியான நபர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளலும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைப்பைப் பேணலும்.

(15) திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றிக் கொள்ளும்போது தேவையான சந்தர்ப்பங்களில் பொலிசாரின் உதவியைப் பெற்றுக் கொள்ளல்.

## பகுதி II

### மத்திய மாகாண கலாசாரக் குழுக்களை ஸ்தாபித்தல்

7. (1) மாகாணத்தின் அழகியற் கலைகளை ஊக்குவித்து அவற்றைப் பாதுகாப்பதற்கும், கலைஞர்களது பொருளாதார பலத்தை மேம்படுத்துவதற்கும் மாகாண நாட்டிய, பாடல், இசைத் துறைகளுக்கான கலாசாரக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட முடியும். இக்குழுக்கள் மாகாணப் பணிப்பாளரின் மேற்பார்வையின் கீழ் நடாத்திச் செல்லப்படல் வேண்டும். கலாசாரக் குழுக்களை ஸ்தாபித்தல்.

(2) கலாசாரக் குழுக்களுக்கான கலைஞர்கள் மற்றும் ஆலோசகர்களை நியமனம் செய்தல், அவர்களது தகைமைகளைத் தீர்மானித்தல், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் மற்றும் மேற்பார்வை, அவர்களுக்குரிய கொடுப்பனவுகளைச் செலுத்துதல், அவர்களை நீக்குதல் ஆகிய விடயங்கள் குறித்து மாகாணப் பணிப்பாளருக்கு அமைச்சின் செயலாளரின் அனுமதியின் கீழ் விதிமுறைகளை ஏற்படுத்த முடியும்.

(3) திணைக்களத்தின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு அவசியமானது என விளங்கும் நடவடிக்கைகளின்பால் கலாசாரக் குழுக்களை வழிநடாத்தும் தகைமை கலாசாரப் பணிப்பாளருக்கு உண்டு.

## பகுதி III

### பிரதேச கலாசாரக் கமிட்டிகள் மற்றும் மாகாண கலாசார அதிகார பீடம் ஆகியனவற்றை ஸ்தாபித்தல்

கலாசாரக் கமிட்டிகளை ஸ்தாபித்தல்.

8. (1) சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் பிரிவுக்கு ஒன்று என்ற அடிப்படையில் இதன் பிறகு கமிட்டி என அழைக்கப்படும் பிரதேச கலாசாரக் கமிட்டிகள் ஸ்தாபிக்கப்படல் வேண்டும்.

(அ) குறித்த பிரதேச செயலாளர் பிரிவில் வசிக்கும் கலைஞர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட கலை ஈடுபாடு கொண்ட நபர்கள் பிரதேச கலாசாரக் கமிட்டியில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

(ஆ) கமிட்டி அங்கத்தவர்களிலிருந்து பொதுக்கூட்டமொன்றில் கமிட்டிக்கான தலைவர் ஒருவர், செயலாளர் ஒருவர் மற்றும் பொருளாளர் ஒருவர் ஆகியோர் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

(இ) உரிய பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர், பதவி வழியில் பிரதேச கலாசாரக் கமிட்டியின் போஷகராக இருப்பதோடு, கலாசார அலுவலர், கமிட்டியின் நடவடிக்கைகளின் இணைப்பாளராகச் செயற்படல் வேண்டும்.

(2) கமிட்டியின் பதவிக்காலம் ஒரு வருடமாகும்.

கலாசாரக் கமிட்டியின் யாப்பில் அடங்க வேண்டிய பொது விதிமுறைகள்

9. (1) அனைத்துக் கமிட்டிகளிலும் அக்கமிட்டியின் அமைவு, அதன் கணக்கு மற்றும் கமிட்டியை நடாத்திச் செல்வதற்குத் தேவையான ஏனைய விதிமுறைகள் அடங்கிய யாப்பொன்று இருக்க வேண்டும் என்பதோடு, மாகாணப் பணிப்பாளரின் பரிந்துரையின் பேரில் கமிட்டியின் யாப்பில் அடங்க வேண்டிய பொது விதிமுறைகள் அமைச்சரால் காலத்துக்குக் காலம் ஒழுங்குவிதிகள் மூலம் விதிக்கப்பட முடியும்.

(2) கமிட்டியின் தேவைகளுக்கேற்ப மேலே சொன்ன பொது விதிமுறைகளுக்கு முரண்படாத வகையில் யாப்பொன்றை தயாரித்துக் கொள்ள கமிட்டிகளுக்கு முடியும்.

பிரதேச கலாசாரக் கமிட்டிகளின் அதிகாரங்கள்

10. பிரதேச கலாசாரக் கமிட்டிகளின் அதிகாரங்கள் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

(1) குறித்த பிரதேச செயலாளர் பிரிவினுள் காணப்படும் புலப்படும் மற்றும் புலப்படா மரபுரிமைகளை பேணிப் பாதுகாக்கின்ற மத, கலாசார, பண்பாட்டு மற்றும் ஆன்மீகப் பெறுமானங்களை ஊக்குவிப்பதற்கு திட்டங்களைத் தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்.

(2) மாகாண கலாசாரத் திணைக்களத்தின் பணிகளை பிரதேச ரீதியில் நடைமுறைப்படுத்த உதவுதல்.

(3) கமிட்டியின் அதிகார எல்லையினுள் வசிக்கும் கலைஞர்களுக்காக மத்திய மாகாண சபை அல்லது மத்திய மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அவ்வப்போது முன்வைக்கப்படும் நலன்புரி வாய்ப்புக்களின் போதும் ஏனைய பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அவை சமமாகவும் சமத்துவமாகவும் பிரிந்து செல்லும் வேலைத் திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

(4) கிராமிய மட்டத்தில் நடாத்தப்படும் பல்வேறு கலைப் படைப்புக்களின் தரத்தை மேம்படுத்துதல், கிராமியக் கலைஞர்களது அந்தஸ்தை மேம்படுத்துவதற்குப் பங்களித்தல் மற்றும் அப்படைப்புக்களுக்கு, போட்டித் தன்மையுடனான படைப்புக்களை மதிப்பிடும் பின்புலமொன்றை அரச மட்டத்தில் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(5) அனைத்துத் துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கலைஞர்களது கருத்துக்கள், ஆலோசனைகள், முன்மொழிவுகள் மற்றும் பங்களிப்புக்கான களமொன்றை ஏற்படுத்தலும் அத்தகைய கலைஞர்களது தனித்துவத்தை உத்தரவாதப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தலும்.

(6) பல்வேறு புத்தாக்க கலாசார மற்றும் கலை நிகழ்ச்சிகளை கிராமிய மற்றும் பிரதேச ரீதியில் செயற்படுத்தும் பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்துதல்.

(7) கமிட்டியின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் கலாசாரத்தையும் கலைப் படைப்புக்களையும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பரவலாக்கம் செய்யும் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் கமிட்டியின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் கலைஞர்களுக்கு பல்வேறு நாடுகளதும் அறிவை பரிமாறிக்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தலும்.

(8) சாதாரண மட்டத்தில் இருக்கும் கலைஞர்களது படைப்புக்களை வெளியிடுவதற்கான ஒத்தாசைகளை வழங்குதல்.

(9) கமிட்டியின் அதிகார எல்லையினுள் வசிக்கும் கலைஞர்களது சமூக, பொருளாதார நிலைமைகளை பலப்படுத்தும் பொருட்டு நிலை பேறான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

(10) பண்பாடுமிக்கதும் நற்குணம் கொண்டதுமான சமூகமொன்றை உருவாக்குவதற்குத் தடையாக அமையும் சமூக சூழலை இல்லாமற் செய்தலுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(11) பிரதேச கலைஞர்களுக்கு மத்திய மாகாணத்தினுள் விருதுகள் வழங்கப்படும்போது பரிந்துரைகளை வழங்குதல்.

(12) பிரதேச கலை விழாக்களை ஏற்பாடு செய்தல்.

(13) பிரதேசத்தில் இயங்கும் கலாலயங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இக்கமிட்டி மூலம் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

(14) கமிட்டியின் அதிகார எல்லையினுள் வசிக்கும் கலைஞர்களது நலனோம்புகையில் தலையீடு செய்தல்.

(15) பிரதேசத்தினுள் கலை, கலாசார, வரலாற்று, சமய அலுவல்களுக்கு நிதி அனுசரணை வழங்குதல்.

(16) கமிட்டியினால் ஏற்பாடு செய்யப்படும் கலாசார நிகழ்ச்சிக்குத் தேவையான உதவிகளை அரச, மாகாண சபை, உள்ளூராட்சி சபைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் அல்லது வேறு சட்ட ரீதியான நபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளல்.

(17) கமிட்டி அங்கத்தவர்களது நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், கச்சேரிகள், விற்பனைச் சந்தைகள் ஆகியனவற்றுக்காக செலவழித்தல், அதனை மீளப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பெற்றுக்கொண்ட இலாபத்தில் கமிட்டி தீர்மானிக்கும் வீதமொன்றை வருமானமாகப் பெற்றுக்கொள்ளல்.

(18) கமிட்டியின் அதிகார எல்லையினுள் நடைபெறும் புலப்படு கலாசார மரபுரிமைகளைப் பேணிப்பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டங்களின் இணைப்பாக்க நடவடிக்கைகளில் தலையிடல்.

(19) கமிட்டியின் கணக்கை நடாத்திச் செல்வதற்கான நிதியைத் திரட்டுதல்.

11. அனைத்துப் பிராந்திய கலாசாரக் கமிட்டிகளும் கமிட்டியின் யாப்பில் காட்டப்பட்டுள்ள விதிமுறைகளின் படி கணக்கொன்றை நடாத்திச் செல்லல் வேண்டும். பிராந்திய கலாசாரக் கமிட்டியின் கணக்கு

மாகாண கலாசார அதிகார பீடத்தை ஸ்தாபித்தல்.

12. மாகாணத்திற்காக (இங்கு இதன் பிறகு அதிகார பீடம் என அழைக்கப்படுகின்ற) மாகாண கலாசார அதிகார பீடத்தை ஸ்தாபித்தல் வேண்டும்.

(1) சகல பிரதேச கலாசாரக் கமிட்டிகளிலிருந்தும் தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் ஆகிய பதவி வகிப்போரிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு மாகாண கலாசார அதிகார பீடத்தின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

(2) மாகாண கலாசார அதிகார பீட அங்கத்தவர்களிலிருந்து பொதுக்கூட்டமொன்றில் அதிகார பீடத்துக்கான தலைவர் ஒருவர், செயலாளர் ஒருவர் மற்றும் பொருளாளர் ஒருவர் ஆகியோர் தெரிவு செய்யப்படல் வேண்டும்.

(3) மாகாணப் பணிப்பாளர், மாகாண அதிகார பீடத்தின் போஷகராக பதவி வகிக்க வேண்டும் என்பதோடு, கலாசார அலுவலர் ஒருவர் அதிகார பீடத்தின் நடவடிக்கைகளின் இணைப் பாளராகச் செயற்படல் வேண்டும்.

(4) அதிகார பீடத்தின் பதவிக் காலம் ஒரு வருடமாகும்.

மாகாண கலாசார அதிகார பீடத்தின் அதிகாரங்கள்

13. மாகாண கலாசார அதிகார பீடத்தின் அதிகாரங்கள் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

(1) மாகாணத்தினுள் காணப்படும் புலப்படா மரபுரிமைகளை பேணிப் பாதுகாப்பதற்காக பிராந்திய கலாசாரக் கமிட்டிகளின் மட்டத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.

(2) மாகாணத்தினுள் அமைந்துள்ள மத ஸ்தலங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தலையீடு செய்தல் மற்றும் பிரதேச ரீதியில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.

(3) மத்திய மாகாணத்தில் வசிக்கும் கலைஞர்களுக்காக மத்திய மாகாண சபை அல்லது மத்திய மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அவ்வப்போது முன்வைக்கப்படும் நலன்புரி வாய்ப்புக்களின் போதும் ஏனைய பல்வேறு சந்தர்ப்பங்களிலும் அவை சமமாகவும் சமத்துவமாகவும் பிரிந்து செல்லும் வேலைத் திட்டமொன்றை ஏற்படுத்தலும் அதனை மேற்பார்வை செய்தலும்.

(4) மாகாணத்தினுள் நடாத்தப்படும் பல்வேறு கலைப்படைப்புக்களின் தரத்தை மேம்படுத்துதல், மாகாணத்தினுள் கலைஞர்களது அந்தஸ்தை தரப்படுத்துவதற்குப் பங்களித்தல் மற்றும் அப்படைப்புக்களை மதிப்பிடும் பின்புலமொன்றை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(5) அனைத்துத் துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் கலைஞர்களது கருத்துக்கள், ஆலோசனைகள் முன்மொழிவுகள் மற்றும் பங்களிப்புக்கான களமொன்றை ஏற்படுத்தலும் அத்தகைய கலைஞர்களது தனித்துவத்தை உத்தரவாதப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தலும்.

(6) பல்வேறு புத்தாக்கக் கலாசார மற்றும் கலை நிகழ்ச்சிகளை கிராமிய மற்றும் மத்திய மாகாண ரீதியில் செயற்படுத்தும் பொறிமுறையொன்றை உருவாக்குதல்.

(7) மத்திய மாகாணத்தின் கலாசார மற்றும் கலைப் படைப்புக்களை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பரவலாக்கம் செய்யும் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் மத்திய மாகாணக் கலைஞர்களுக்கு பல்வேறு நாடுகளதும் அறிவை பரிமாறிக் கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தலும்.

(8) சாதாரண மட்டத்தில் இருக்கும் கலைஞர்களது படைப்புக்களை வெளியிடுவதற்கான ஒத்தாசைகளை வழங்குதலும் கலைஞர்களது சமூக, பொருளாதார நிலைமைகளை பலப்படுத்தும் பொருட்டு நிலைபேறான வேலைத் திட்டமொன்றை ஏற்படுத்துதலும்.

(9) கிராமிய மட்டத்தில் நடாத்தப்படும் பல்வேறு கலைப் படைப்புக்களின் தரத்தை மேம்படுத்துதல், கிராமியக் கலைஞர்களது அந்தஸ்தை தரப்படுத்துவதற்குப் பங்களித்தல் மற்றும் அப்படைப்புக்களுக்கு, போட்டித் தன்மையுடனான படைப்புக்களை மதிப்பிடும் பின்புலமொன்றை அரச மட்டத்தில் ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(10) மத்திய மாகாண அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் கலாசாரத்தையும் கலைப் படைப்புக்களையும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பரவலாக்கம் செய்யும் வாய்ப்புக்களை ஏற்படுத்தலும் மாகாண அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தின் கலைஞர்களுக்கு பல்வேறு நாடுகளதும் அறிவை பரிமாறிக்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தலும்.

(11) சாதாரண மட்டத்தில் இருக்கும் கலைஞர்களது படைப்புக்களை வெளியிடுவதற்கான ஒத்தாசைகளை வழங்குதல்.

(12) மத்திய மாகாண கமிட்டியின் அதிகார எல்லையினுள் வசிக்கும் கலைஞர்களது சமூக, பொருளாதார நிலைமைகளை பலப்படுத்தும் பொருட்டு நிலை பேறான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல்.

(13) பண்பாடுமிக்கதும் நற்குணம் கொண்டதுமான சமூகமொன்றை உருவாக்குவதற்குத் தடையாக அமையும் சமூக சூழலை இல்லாமற் செய்தலுக்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

(14) அதிகார பீடத்தின் எல்லையினுள் இயங்கும் கலாலயங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.

(15) அதிகார பீடத்தின் அதிகார எல்லையினுள் வசிக்கும் கலைஞர்களது நலனோம்புகையில் தலையீடு செய்தல்.

(16) அதிகார பீடத்தின் அதிகார எல்லையினுள் கலை, கலாசார, வரலாற்று, சமய நிகழ்ச்சிகளுக்கு நிதி அனுசரணை வழங்குதல்.

(17) அதிகார பீடத்தினால் ஏற்பாடு செய்யப்படும் கலாசார நிகழ்ச்சிகளுக்குத் தேவையான உதவிகளை அரச, மாகாண சபை, உள்ளூராட்சி சபைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் அல்லது வேறு சட்ட ரீதியான நபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளல்.

(18) அதிகார பீடத்தின் அங்கத்தவர்களது நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், கச்சேரிகள், விற்பனைச் சந்தைகள் ஆகியனவற்றுக்காக செலவளித்தல், அதனை மீளப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பெற்றுக் கொண்ட இலாபத்தில் கமிட்டி தீர்மானிக்கும் வீதமொன்றை வருமானமாகப் பெற்றுக்கொள்ளல்.

(19) அதிகார பீடத்தின் எல்லையினுள் நடைபெறும் புலப்படு கலாசார மரபுரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்டங்களின் இணைப்பாக்க நடவடிக்கைகளில் தலையிடல்.

(20) அனைத்துக் கலைஞர்களுக்கும் நலன்புரி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் உருவாக்கப்படுகின்ற நிதியத்துக்கு (நிதியமும் கணக்கும்) பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் நிதி திரட்டுதல்.

14. (i) மாகாண அதிகார பீடத்துக்கு அதன் அமைவு, அதன் கணக்கு மற்றும் அவ் அதிகார பீடத்தை நடாத்திச் செல்வதற்குத் தேவையான ஏனைய விதிமுறைகள் அடங்கிய யாப்பொன்று இருக்க வேண்டும் என்பதோடு, அதிகார பீடத்தின் யாப்பில் அடங்க வேண்டிய பொது விதிமுறைகள் மாகாணப் பணிப்பாளரின் பரிந்துரையின் பேரில் செயலாளரால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படல் வேண்டும். மாகாண அதிகார பீடத்தின் யாப்பு

(ii) அதிகார பீடத்தின் தேவைகளுக்கேற்ப மேலே சொன்ன பொது விதிமுறைகளுக்கு முரண்படாத வகையில் யாப்பை தயாரித்துக்கொள்ள அதிகார பீடத்துக்கு அதிகாரமுண்டு.

15. மாகாண அதிகார பீடம் அதன் யாப்பில் காணப்படும் விதிமுறைகளின் கீழ் கணக்கொன்றை நடாத்திச் செல்ல வேண்டும். அதிகார பீடத்தின் கணக்கு

*அதிகார பீடத்தையும் கமிட்டிகளையும் பதிவு செய்து கொள்ளல்*

16. அதிகார பீடமும் ஏனைய அனைத்து பிரதேச கமிட்டிகளும் மாகாணப் பணிப்பாளரின் கீழ் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

17. 16 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவு செய்தலுக்குத் தேவையான விதி முறைகள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் சட்ட திட்டங்கள் மூலம் விதிக்கப்படல் வேண்டும்.

## பகுதி IV

## மத்திய மாகாண கலாசாரக் கணக்கை ஸ்தாபித்தல்

*மத்திய மாகாண கலாசாரக் கணக்கை ஸ்தாபித்தல்*

18. மத்திய மாகாண நம்பிக்கை நிதியத்தின் கீழ் கலாசார அலுவல்களுக்காக தனியான கணக்கொன்றை நடாத்திச் செல்லல் வேண்டும். இக்கணக்கின் நிதிகள் கலைஞர்களது நலன்புரி, பாரம்பரிய மரபுகள், நாட்டார் கதைகள் மற்றும் மக்கள் கலைகளைப் பாதுகாத்தல், பண்பாட்டு மற்றும் ஆன்மீக அபிவிருத்தி, பாரம்பரிய உரிமைகளைப் பாதுகாத்தல் ஆகிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட முடியும்.

*கணக்குக்கான வரவுகள்*

19. கணக்குக்கான வரவுகள் பின்வருமாறு அமையும் :

(1) மாகாண சபையால் செய்யப்படும் ஒதுக்கீடுகள்.

(2) திணைக்களத்துக்கு வழங்கப்படும் அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி உதவிகள் மற்றும் நன்கொடைகள் மூலமான நிதி.

(3) இப்பிரமாணத்தின் கீழ் விதிக்கப்படும் அனைத்துக் கட்டணங்களும்.

(4) கலாசாரத் திணைக்களத்தால் நிதி ஈட்டத்துக்காக ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளின் மூலம் கிடைக்கும் வருமானம்.

(5) கலாசாரக் குழுக்கள் மூலம் கிடைக்கும் வருமானம்.

*கலாசாரக் கணக்கின் மூலம் பணம் செலுத்துதல்*

20. கணக்கின் நிதிகளைப் பயன்படுத்தும் பொருட்டு தயாரிக்கப்படும் மதிப்பீட்டை அமைச்சுச் செயலாளரின் கையொப்பத்துடன் மாகாணத் திறைசேரிக்கு சமர்ப்பித்த பின்னர் மாகாணத் திறைசேரியால் நிதி விடுவிக்கப்படல் வேண்டும்.

*கணக்கை கணக்காய்வுக்கு உட்படுத்துதல்*

21. கணக்கின் வரவுகள் மற்றும் செலவுகள் உள்ளிட்ட அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் வருடாந்தம் கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். அக்கணக்கறிக்கை நிதி வருடம் நிறைவடைந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் மாகாண சபைக்கு தெரிந்து கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நிதி வருடம் நிறைவடைந்து 03 மாதங்களுக்குள் வருடாந்த அறிக்கையொன்று விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரால் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

## பகுதி V

## பொது விதிமுறைகள்

*அமைச்சர் கட்டளை பிறப்பித்தல்*

22. (1) அமைச்சரால் இப்பிரமாணத்தின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்தவும் மற்றும் சட்ட வலுவுடையதாக ஆக்கவுமான கட்டளைகளைப் பிறப்பிக்க முடியும்.

(2) (1) ஆவது உப உறுப்புரையின் மூலம் வழங்கப்படும் அதிகாரங்களின் பொதுத் தன்மைக்கு பாதிப் பேற்படாத வகையில் அமைச்சரால் கீழ்க் குறிப்பிடப்படும் அனைத்து விடயங்கள் அல்லது ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட முடியும்.

(3) திணைக்களத்தின் பணிகள் மற்றும் அதிகாரங்களை செயற்படுத்துவதற்கும் கலாசாரக் குழுக்கள், கலாசாரக் கமிட்டிகள் மற்றும் மத்திய மாகாண அதிகார பீடத்தின் பணிகளையும் அதிகாரங்களையும் செயற்படுத்துவதற்கும் தேவையான காரணிகள்.

(4) கண்காட்சி மற்றும் பகிரங்க அரங்கேற்றத்துக்காக திரைப்படங்களுக்கு அனுமதி வழங்குதல் தவிர்ந்த நாடக அரங்குகள் மற்றும் இசை அரங்கேற்றங்கள், திரைப்பட மாளிகைக் காட்சிகள் மற்றும் உல்லாச அலுவல்கள் மற்றும் அதனோடிணைந்த காரியங்கள் தொடர்பான ஒழுங்கு விதிகள்.

(5) மாகாணத்தின் பாதுகாக்கப்பட வேண்டிய கலாசார முதுசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள அட்டப்பிரிகர மற்றும் ஏனைய பூஜைப்பொருட்கள், ஆடை அணிகலன்கள், கலை நுட்பம் கொண்ட பொருட்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகம் சம்பந்தமான தராதரங்களை நிர்ணயம் செய்தல் மற்றும் அதனோடிணைந்த காரியங்கள் தொடர்பான ஒழுங்கு விதிகள்.

(6) மாகாணத்தின் பாதுகாக்கப்பட வேண்டிய கலாசார முதுசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ள பாரம்பரிய மக்கள் கலைகள், பாரம்பரிய நடனங்கள், பாடல்கள், பொது இடங்களிலான அரங்கேற்றங்கள் மற்றும் அதனோடிணைந்த காரியங்கள் தொடர்பான ஒழுங்கு விதிகள்.

(7) அமைச்சரால் மேற்கொள்ளப்படும் அனைத்துக் கட்டளைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும் என்பதோடு அவ்வாறு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு மூன்று மாதங்களுக்குள் மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அவற்றுக்கு மாகாண சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(8) மாகாண சபையால் அவ்வாறு அங்கீகரிக்கப்படாத அனைத்துக் கட்டளைகளும் அவற்றின் கீழ் முன்னர் நிறைவேற்றப்பட்ட எந்தவொரு பணிக்கும் பாதிப்பேற்படாத வகையில் அவ் அனுமதி கிடைக்காத தினத்திலிருந்து முடிவுறுத்தப்பட்டதாக கணிக்கப்படல் வேண்டும்.

## பகுதி VI

## குற்றங்களும் தண்டனைகளும்

23. (1) மாகாணத்தின் பாதுகாக்கப்பட வேண்டிய கலாசார முதுசங்களாக பெயரிடப்பட்டுள்ள அட்டபிரிக்கர மற்றும் பூஜைப் பொருட்கள், ஆடை அணிகலன்கள், கலை நுட்பம் கொண்ட பொருட்களை உரிய நியமனங்களின் அடிப்படையில் மாத்திரம் உற்பத்தி செய்ய வேண்டியதோடு, இலாபம் பெறும் நோக்கில் விற்பனை மற்றும் விநியோகம் செய்வதாயின் உரிய நியமங்களைப் பேணி அவ்வாறு செய்தல் வேண்டும்.

உரிய நியமங்களைப் பேணாமல் பொருள் உற்பத்தி செய்வது குற்றமாகும்.

(2) மாகாணத்தின் பாதுகாக்கப்பட வேண்டிய கலாசார முதுசங்களாக பெயரிடப்பட்டுள்ள அட்டபிரிக்கர மற்றும் பூஜைப் பொருட்கள், ஆடை அணிகலன்கள், கலை நுட்பம் கொண்ட பொருட்கள் ஆகியனவற்றை உரிய நியமங்களின் அடிப்படையில் அல்லாமல் உற்பத்தி, விற்பனை மற்றும் விநியோகம் செய்யும் நபரொருவர், நிறுவனமொன்று அல்லது நபர்கள் குழுவொன்று இப்பிரமாணத்தின் கீழ் குற்றமொன்றைச் செய்பவர்களாவர்.

(3) (2) ஆம் உப உறுப்புரையின் கீழ் குற்றமொன்றைச் செய்யும் நபரொருவர், நிறுவனமொன்று அல்லது நபர்கள் குழுவொன்று இப்பிரமாணத்தின் கீழ் குற்றவாளிகளாக ஆவதோடு நீதவான் ஒருவர் முன்னிலையில் நடாத்தப்படும் சுருக்க வழக்கு விசாரணை ஒன்றின் பின்னர் குற்றவாளியாக ஆக்கப்படுமிடத்து ரூபா இருபத்தையாயிரத்துக்கு மேற்படாத தண்டப் பணத்தைச் செலுத்துவதற்கு அல்லது இரண்டு வருடங்களுக்கு மேற்படாத காலத்துக்கு இரு முறைமைகளில் ஒரு முறைமையின் கீழ் சிறையிலடைக்கப்படுவதற்கு அல்லது அத்தண்டப் பணத்தைச் செலுத்துதல் மற்றும் சிறைத் தண்டனைக்கு உட்படல் ஆகிய இரு தண்டனைகளுக்கும் உட்பட வேண்டியேற்படும்.

24. 23(1), 23(2) ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் அல்லாத இச்சட்ட வரைபின் ஏதும் விதிமுறையொன்றை அல்லது அதன் கீழ் ஏற்படுத்தப்படுகின்ற ஏதும் கட்டளையொன்றின்

விதிமுறைகளை மீறிச் செயற்படுகின்ற யாரேனும் நபரொருவர் இச்சட்ட வரைபின் கீழ் குற்றமொன்றைச் செய்கிறார் என்பதோடு, அக்குற்றம் இச்சட்ட வரைபின் மூலம் விஷேடமான தண்டனையொன்றுக்காக கருத்திற் கொள்ளப்படாத குற்றமொன்றாக இருக்கும் சந்தர்ப்பத்தில் நீதிவான் ஒருவர் முன்னிலையில் நடாத்தப்படும் சுருக்க வழக்கு விசாரணை ஒன்றின் பின்னர் குற்றவாளியாக ஆக்கப்படுமிடத்து ரூபா பத்தாயிரத்துக்கு மேற்படாத தண்டப் பணத்தைச் செலுத்துவதற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்கு இரு முறைமைகளில் ஒரு முறைமையின் கீழ் சிறையிலடைக்கப் படுவதற்கு அல்லது அத்தண்டப் பணத்தைச் செலுத்துதல் மற்றும் சிறைத்தண்டனைக்கு உட்படல் ஆகிய இரு தண்டனைகளுக்கும் உட்பட வேண்டியேற்படும்.

## பகுதி VII

## இடைக்கால விதிமுறைகள்

25. உரிய தினத்துக்கு முன்னரிலிருந்து மத்திய மாகாணக் கலாசாரத் திணைக்களம் மற்றும் அதன் மாகாணப் பணிப்பாளராகப் பணியாற்றும் நபர் இப்பிரமாணத்தின் விடயங்களுக்காக 03 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளராக கருதப்பட வேண்டியதோடு உரிய தினத்துக்கு முன்னரிலிருந்து திணைக்களத்தில் பணியாற்றும் அதிகாரிகள் மேலே 04 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்படும் அதிகாரிகளாகக் கருதப்படல் வேண்டும்.

வியாக்கியானம்

பொருள் வரை விலக்கணம்

26. உரிய தினத்துக்கு முன்னரிலிருந்து செயற்பட்ட கலாசாரத் திணைக்களத்துக்குச் சொந்தமாக இருந்த அனைத்து சொத்துக்கள், பொறுப்புக்கள், அனைத்துக் கடன் பிணைப்புக்கள், வழக்கு நடவடிக்கைகள் மற்றும் அத்திணைக்களத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகள் அனைத்தும் இப்பிரமாணத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட திணைக்களத்துக்குச் சொந்தமான சொத்துக்கள், பொறுப்புக்கள், கடன் பிணைப்புக்கள், வழக்கு நடவடிக்கைகள் மற்றும் உடன்படிக்கைகளாகக் கருதப்படல் வேண்டும்.

27. இப்பிரமாணத்தின் வார்த்தைப் பிரயோகங்கள் தொடர்பில் வேறு அர்த்தங்கள் தேவைப்பட்டால் ஒழிய,

"புலப்பாடு கலாசார உரிமைகள்" என்பதன் மூலம் அனைத்து சமயத் தளங்கள், கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களும் பாரம்பரிய முதுசங்களாகப் பேண முடியுமான ஆவணங்கள் மற்றும் பொருட்கள் ஆகியனவும் கருதப்படும்.

"புலப்படா கலாசார உரிமைகள்" என்பதன் மூலம் அனைத்து சமய மற்றும் கலாசார விழாக்கள், நாட்டார் இலக்கியங்கள், பாரம்பரியக் கதைகள், பாரம்பரியக் கலைகள், வித்தைகள் மற்றும் சாந்திக் கருமங்கள் ஆகியன கருதப்படும்.

"ஆளுநர்" என்பதன் மூலம் மத்திய மாகாண ஆளுநர் கருதப்படுவார்.

"அமைச்சர்" என்பதன் மூலம் மத்திய மாகாண சபையின் கலாசார விவகாரத்துக்குப் பொறுப்பான அமைச்சர் கருதப்படுவார்.

"மாகாணம்" என்பதன் மூலம் மத்திய மாகாணம் கருதப்படும்.

"மாகாண சபை" என்பதன் மூலம் மத்திய மாகாண சபை கருதப்படும்.

"அமைச்சின் செயலாளர்" என்பதன் மூலம் மத்திய மாகாண சபையின் கலாசார விவகாரத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் கருதப்படுவார்.

"மாகாணப் பணிப்பாளர்" என்பதன் மூலம் மத்திய மாகாண கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் கருதப்படுவார்.

"மாகாணக் கலாசார அலுவலர்" என்பதன் மூலம் மத்திய மாகாண அரச சேவையில் பணிபுரியும் கலாசார அலுவலர் கருதப்படுவார்.

"சொத்து" என்பதன் மூலம் கலாசார நிதியம், கலாசார கமிட்டிகள் அதிகார பீடம் ஆகியவற்றுக்குச் சொந்தமான புத்தகங்கள், ஆவணங்கள், வங்கியிலுள்ள பணம் மற்றும் கையிருப்பில் உள்ள பணம், தளபாடங்கள், உபகரணங்கள், கட்டிடம் மற்றும் காணி செயற்திட்டங்கள் மற்றும் அசையும், அசையாச் சொத்துக்கள் ஆகியன அனைத்தும் கருதப்படும்.

"சேவையில் இணைத்துக் கொள்வதற்கான ஒழுங்கு விதிகள்" என்பதன் மூலம் மத்திய மாகாண ஆளுநரால் அனுமதிக்கப்படுகின்ற, சேவையில் இணைத்துக் கொள்வதற்கான ஒழுங்கு விதிகள் கருதப்படும்.

"கலைஞர்" என்பதன் மூலம் பாடல், இசை, நடனம், இலக்கியம், சித்திரம், சிற்பம், கேடயம், நாடகம், திரைப்படம் ஆகிய துறைகளில் இயற்கையாக, பாரம்பரியமாக அல்லது அவ்வத் துறைகளிலான கல்வித் தகைமைகளைப் பெற்று அவ்வக் கலைகளில் நிரந்தரமாக ஈடுபடும் அல்லது ஈடுபட்டு அவ்வத் துறைகளில் சமூகத்துக்குப் பயனளிக்கும் பணிகளைச் செய்த அல்லது செய்கின்ற நபர்கள் கருதப்படுவர்.

"கலாசார அலுவல்கள்" என்பதன் மூலம் 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் 09 ஆம் உப உறுப்புரையின் முதலாம் பட்டியலில் 25.1, 25.2, 29.1, 28 ஆகிய தலைப்புக்களின் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்கள் கருதப்படும்.

28. திணைக்களமானது, இலஞ்ச ஊழல் சட்டத்திற்கான விளக்கத்தின் பிரகாரம் பட்டியலிடப்பட்ட நிறுவனமொன்றாக கருதப்பட வேண்டியதோடு, அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதன்படி விளக்க மளிக்கப்படல் வேண்டும். *இலஞ்ச ஊழல் சட்டத்தின் பட்டியலிடப்பட்ட நிறுவனமொன்றாக கருதப்பட வேண்டியமை.*

29. திணைக்களத்தின் சகல பதவி தாங்குனர்களும் மற்றும் பணியாளர்களும் குற்றவியல் சட்டக் கோவையின் விடயங்கள் தொடர்பில் அரச அலுவலர்களாக கருதப்படல் வேண்டும். *பணியாளர்கள் அரச அலுவலர் களாக கருதப்படல் வேண்டும்.*

30. இப்பிரமாணத்தின் சிங்கள மொழி மற்றும் தமிழ் மொழி பிரதிகளிடையே ஏதும் பொருத்தமின்மைகள் ஏற்பட்டால் சிங்கள மொழிப் பிரதியின் வாசகங்களே கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

11 - 1100

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.